# யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்த நாணயங்கள்

செ. கிருஷ்ணராசா

நாணயங்களையும் வரலாற்றின் அடிப்படை ஆதாரங்களுள் ஒன்றாக வைத்து, ஆய்வுசெய்து வரலாற்றினை எழுதும் கலையானது தென்னாசியாவைப் பொறுத்தமட்டில் கி. பி. 12ஆம் நூற்றாண்டளவில் காஸ்மீரில் வாழ்ந்த கல்கனர் என்ற வரலாற்றாசிரியரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆயினும் நவீன வரலாற்றியலில் அதன் உபயோகம் மிக அண்மைக்காலத்திலேயே ஐரோப்பிய நாடுகளில் உணரப்பட்டது. மறுமலர்ச்சிக்கால ஐரோப்பாவில் பரிணமித்த மனிதாபிமான இயக்கத்துடன் இந்த நாணயங்கள் பற்றிய ஆர்வமும் அவற்றினைச் சேகரித்து வைக்கின்ற முறையும் தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் அவ்வார்வம் செல்வந்தர்களிடையே அழகியலையே அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், வரலாற்றியலில் அவற்றின் முக்கியத்துவம் நன்றாக உணரப்பட்டதனால் நாணயங்கள் பற்றிய ஆய்வு விஞ்ஞான - தொழில்நுட்ப ரீதியிலான முறைக்கு இட்டுச்செல்லப்பட்டது. இன்று ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது, ஆசியநாடுகளிலும் குறிப்பாக தென்னாசியாவிற்கூட அரசியல், சமூக, கலாச்சார வரலாறு குறித்து நாணயவியல் பற்றிய ஆய்வு புத்தூக்கத்தினைப் பெற்று வருவதனைக் காணலாம்.

''மனித நாகரீக வரலாற்றிலே நாணயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் புரட்சிகரமான ஒரு சம்பவமாகும்''.[1] நதிக்கரையோர நாகரீகங்களின் தோற்றத்துடன் ஏற்பட்ட அறிவியலின் வளர்ச்சியும் அதன் தொடர்ச்சியும் பல்வேறுபட்ட பொருளாதார அமைப்புக்கள் உருவாவதற்கு வழிவகுத்தன. இவ்வமைப்புக்களின் இயக்கவிளைவாகவே 'மிகையுற்பத்தி' என்றவொரு நிலை உருவாக்கப்பட்டது. இந்நிலையே காலப்போக்கில் பல தொழிற்பிரிவுகள் தோன்றுவதற்கு வித்திட்டது. இத்தொழிற்பிரிவுகளின் இயக்கமானது ஆரம்பத்தில் பண்டமாற்றுப் பொருளாதார முறைக்கும் பின்பு நாணயத்தின் தோற்றத்திற்கும் அதன் பரிவர்த்தனைக்கும் இடமளித்தது. பண்டமாற்றுப் பொருளியல் அமைப்பில் தோன்றிய குறைபாடுகளை நீக்குவதற்கு மனிதன் படிப்படியாக எடுத்த முயற்சிகளும், நடவடிக்கைகளுமே நாளடைவில் இந்நாணய முறையைத் தோற்றுவித்தது எனலாம்.

'Numisma' என்ற கிரேக்கச் சொல்லின் அடியில் இருந்தே 'Numismatics' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் 'நாணயவியல்' என்ற பொருளுடைய சொல் பிறந்தது.[2]

ஓர் ஒழுங்கு முறையான, நாணயங்கள் பற்றிய ஆய்வினையே 'Numisma' என்ற கிரேக்கச்சொல் குறித்து நிற்கின்றது. 'நாணயம்' என்றால் என்ன என்பதற்கு பலவகையான விளக்கங்களை பல்வேறு அடிப்படைகளில் வைத்து ஆய்வாளர் விளக்கியுள்ளனர். அவற்றுள் ஒன்று பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது. ''திட்டவட்டமான வடிவத்தையும் பருப்பத்தையும்

கொண்டதாய் அதிகாரியொருவனால் அங்கீகரிக்கப்பட்ட வடிவங்கள் பொறிக்கப்பட்ட உலோகத்துண்டு நாணயம் எனப்படும்.[3]

திட்டவட்டமான நாணயம் கி.மு. 7ஆம் நூற்றுண்டளவில் சின்னுசி யாவில் உள்ள லிடியாவில் முதன்முதலாகப் பயன்படுத்தப் பட்டதேனத் தொல்லியல் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. 'பொன் இலெக்ரம், வெள்ளிக்கட்டிகளின் தரத்தை உருசுப்படுத்துவதற்காய் லிடியதேச மன்னனின் முத்திரையான சிம்மத்தலேச் சின்னம் அக்கட்டிகளில் பொறிக்கப்பட்டது.[4] இதனைத்தொடர்ந்து ஆமை, எருது, ஆந்தை, மயில் ஆகியவற்றின் உரு வங்கள் பதிக்கப்பெற்ற கட்டிடங்களும் வெளியிடப்பட்டன. இந்தியாவிலே நாணயத்தின் தோற்றம் அதன் பரிவர்த்தனை பற்றி பல்வேறுபட்ட கருத் துக்கள் அறிஞர்கள் மத்தியில் நிலவியபோதும், அங்கு மேற்கொள்ளப் பட்ட தொல்லியல் ஆய்வுகளிலிருந்து அங்கு "புராணுஸ்" என அழைக்கப் பட்ட ஒருவகை அச்சுக்குத்தப்பட்ட வெள்ளிக்காசுகளே காலத்தால் முற் பட்டவை எனக் கண்டறியப்பட்டது. இவ்வகை நாணயங்கள் தென்னுசி யாவில் கி.மு 6ஆம் நூற்றுண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றுண்டுவரையில் பரிவர்த்தனையில் இருந்ததாகக் கொள்ளப்படுகின்றது. இவை எமது நாட் டில் அநேகமாக அநுராதபுரம், யாழ்ப்பாணக்குடாநாடு (கந்தரோடை), மாந்தை, புத்தளம் ஆகிய இடங்களிலேயே கிடைத்துள்ளன. இந்தியா வைப்போன்று இலங்கையிலும் கி. மு. 6 ஆம் நூற்றுண்டிலிருந்து நாணயங் கள் புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன என்பதனை இங்கு மேற் கொண்ட தொல்லியல் ஆய்வுகள் எமக்குணர்த்தி நிற்கின்றன. ஈழத்தின் பிறபகுதிகளைப் போல் யாழ்க்குடாநாட்டிலும் நீண்டகாலமாக மனிதன் நடமாடி வருகிறான் என்பதற்கு இங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்க ளும் சான்றாகும். [5]

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாணயவியல் ஆய்வு:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாணயங்கள் பற்றிய ஆய்வானது இன்னும் ஆரம்ப நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இக்குடாநாட்டின்கண் நாணயங்கள் பற்றிய ஆய்வினை முதன்முதலாக போல் இ. பீரிஸ் என்பவர் 1917இல் கந்தரோடையில் மேற்கொண்ட பரீட்சார்த்த அகழ்வுடனேயே தொடக்கி வைத்தார். இவ ரைத்தொடர்ந்து சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் . செ. இராசநாய கம், எச். டபிள்யூ. கொட்றிங்டன் ஆகியோர் இத்துறையில் பெரிதும் ஆர்வம் காட்டினர். இவர்களுடைய ஆய்வின் நோக்கு பெருமளவுக்கு 'சேது' எனக் குறிக்கப்படும் ஒருவகை நாணயங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஐராவதம் மகாதேவன், வி. சிவசாமி, கலாநிதி எஸ். பத்மநாதன் ஆகியோர் குடாநாட்டின் நாணயவியல் தொடர்பாகப் பல் வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இன்னொரு ஆய்வாளரான, பிரித் தானிய இரசாயனவியல் அறிஞர் டபிள்யூ. என். றேய் என்பவருடைய பங்களிப்பும் இத்துறையில் குறிப்பிடத்தக்கதாகும்.[6] இதே நேரத்தில் குடா நாட்டின்கண் உள்ள வேறுசிலர் நாணயங்களைத் தேடிப்பெற்று, சேகரித்து வைப்பதில் மிகவும் ஆர்வம் காட்டிவருவதும் குறிப்பிடத்தக்கது. அவர் களுள் கா. நா. வே. சேயோன், ஆசிரியர் திருவள்ளுவர், கலைஞானி,

திரு. எஸ். பொன்னம்பலம் முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுடைய பங்களிப்பானது குடாநாட்டு நாணயவியல் ஆய்வு பொறுத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவுள்ளது.

## நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட பிரதான நிலையங்கள்:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் உட்பகுதிகள் பலவற்றிலிருந்து நாணயங்கள் பல்வேறு வகையில் கிடைத்துள்ளன. வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த நாணயங்கள் பல்வேறு அளவுகளில் கந்தரோடை, வல்லிபுரம், நல்லூர் ஆகிய பிரதான தொல்பொருள் தலங்களிலிருந்தும், புலோலி, நாகர்கோயில் மட்டுவில், கோப்பாய், அச்சுவேலி, கொக்குவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, தொல்புரம், வட்டுக்கோட்டை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், நாரந்தனை, புங்குடுதீவு, உடுப்பிட்டி, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்தும் கிடைத்துள்ளன.[7] அண்மையில் தம்பசிட்டி, வியாபாரிமூலை ஆகிய இடங்களில் இக்கட்டுரை ஆசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்களவு நாணயங்கள் சேகரிக்கக்கூடியதாகவிருந்தது. இவ்வாறு குடாநாட்டின்கண் உள்ள பல இடங்களிலிருந்தும் பெருந்தொகையான நாணயங்கள் கிடைத்தாலும், தொடர்ச்சியான முறையிலும் காலஒழுங்கிலும் உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் கிடைத்த தொல்லியல் தலங்களாக கந்தரோடை, வல்லிபுரம் என்பன காணப்படுகின்றன. எனவே இன்றைய நிலையில் புராதன நாணயக் களஞ்சியங்கள் எனக் கொள்ளக்கூடிய தொல்பொருள் தலங்களாக இவ்விரண்டு நிலையங்களுமே விளங்குகின்றன. இவ்விரு பழம்பெரும் நிலையங்களிலிருந்து கி. மு. 6ஆம் நூற்றாண்டுதொட்டு கி.பி. 15ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலத்திய நாணயங்களும்,[8] பிற்காலத்திய நாணயங்களும் கிடைத்துள்ளன. குடாநாட்டின்கண் உள்ள குறிப்பான சில இடங்களில். இருந்து குறிப்பிட்ட சில காலங்களுக்குரிய நாணயங்களும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கிடைத்த நாணயங்கள் பற்றிய பொதுவான ஓர் அட்டவணையை, நாணயங்களைச் சேகரிப்பதில் ஈடுபாடுடைய ஓர் அறிஞர் பின்வருமாறு கொடுத்துள்ளார்.[9]

1. பொன் 'இலெக்றம்' சின்னங்களும் ஓரிரு சின்னங்களைக் கொண்ட பலதரப்பட்ட கட்டிகளும்.
2. 'புராணால்' அல்லது காப்பணங்கள் (கார்ஷாப்பணம்) வெள்ளித்தகட்டில் அல்லது செப்புத்தகட்டில் குத்தப்பட்.ட உருவங்கள்.
3. யவன (பழையகிரேக்க) வெள்ளி நாணயங்கள் (புனித ஆந்தை, தேவதை, அதீனா பொறிக்கப்பட்டவை).
4. கந்தநாணயங்கள் (இவற்றில் பலவகையுள).
5. சுட்ட களிமண்ணாலான நாணயங்கள் (பறவை, எழுத்து வரிசைகள்).
6. ஆதிபாண்டியர் காலத்து நீள்சதுர நாணயங்கள் (யானை, மீன், சின்னங்கள்).

7. சுவஸ்திக, ஸ்தூபி, நந்திபாத, இடபம், யானை, குதிரை, மயில் முதலிய பலதரப்பட்ட சின்னங்களையடக்கிய, அழகாய்ப் பொறிக்கப்பட்ட நாணயங்கள்.

8. நிற்கும் இடபம் பொறித்த நீள்சதுர நாணயங்கள்.

9. மகாசேனன் காலத்து சிம்ம நாணயங்கள். (கி. பி. 277 – 307)

10. ஒரு பக்கத்திலே நீள்சதுர இலக்குமி நிற்பதும் (சில இருப்பதும்) மறுபக்கம் சுவஸ்திக, நிறைகுடம், இடபம் ஆகியவை.

11. ரோம நாணயங்கள் (இவற்றில் பலவகை).

12. சோழ நாணயங்கள் (புலி மன்னர் உருவம் முதலிய பொறிக்கப்பட்டவை).

13. சேர நாணயங்கள்.

14. பல்லவ நாணயங்கள் (சிங்கமும் செப்புக்குடமும், மரமும் புலியும், நிறைகுடமும்).

15. ''லங்கேஸ்வர'' பொன் நாணயங்களும் அவற்றின் அரை, கால் அரைக்கால் விசம் (பொற்பணம்).

16 பொது வட்ட வடிவுள்ள பாண்டிய நாணயங்கள் (பிறை, கயல் மீன், பலதரப்பட்ட அழகிய இடபங்கள், குத்துவிளக்குகள் பாரைமீன், குதிரை, கடம்பமரம்).

17. யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் நாணயங்கள். (இவைகளிலே பலரகங்கள் உள).

18. சிங்கள மன்னரின் செப்பு நாணயங்கள் (தம்பதெனியாக்காசு, 11ஆம் 12ஆம் 13ஆம் நூற்றுண்டு வரையிலான பராக்கிரமபாகு, விஜயபாகு, நிஸங்கமல்ல, லீலாவதி, சாஹசமல்ல, சோடகங்க தேவ, தர்மாசோகதேவ, புவனேகபாகு ஆகியோரின் நாணயங்கள்.

மேலே கொடுக்கப்பட்ட அட்டவணை ஏறத்தாழ கி.மு. 6ஆம் நூற்ருண்டு தொடக்கம் கி. பி. 15ஆம் நூற்ருண்டு வரையிலான யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கிடைத்த நாணய வகைகளை உள்ளடக்குகின்றதென பொதுவாகக் குறிப்பிடலாம். மேலும் இங்கே கிடைத்த நாணயங்களை கால அடிப்படையில் ஐந்து பெரும் பிரிவுகளுக்குட்படுத்தி நோக்கிக் கொள்வது இத்தொகுப்பாய்வுக்குப் பொருத்தமானது. அப்பிரிவுகளாவன:-

(1) கி. பி. 1 ஆம் நூற்ருண்டு வரைக்குமுரிய நாணயங்கள்.

(2) கி. பி. 2ஆம் நூற்ருண்டு தொடங்கி கி. பி. 5ஆம் நூற்ருண்டு வரையிலான நாணயங்கள்.

(3) கி. பி. 6ஆம் நூற்ருண்டு தொடங்கி கி. பி. 10ஆம் நூற்ருண்டு வரைக்குமுரிய நாணயங்கள்.

(4) பொலனறுவை, தம்பதேனியா, கோட்டை அரசர்கால நாணயங்கள்.

(5) யாழ்ப்பாண மன்னர்களுடைய நாணயங்கள் (சேது நாணயங்கள்).

மேலே கொடுக்கப்பட்ட இந்தக் காலப்பகுப்பானது தென்னிந்திய – இலங்கை வரலாற்றின் போக்கில் ஏற்பட்ட சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். தொடர்ந்து மேலே கொடுக்கப்பட்ட இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் இடம்பெறும் குடாநாட்டு நாணயங்கள் பற்றி மிகச் சுருக்கமாக நோக்கலாம்.

## 1. கி. பி. 1ஆம் நூற்றாண்டு வரையிலான குடாநாட்டின் நாணயங்கள்

இலங்கையில் கிடைத்த, காலத்தால் முற்பட்ட நாணயங்களில் ஒரு வகையான 'புராணஸ்' என்பவை யாழ்ப்பாணக் குடாநாட்டில் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய பிரதான தொல்பொருள் தலங்களிலே கிடைத்துள்ளன. கந்தரோடையில் 1917ஆம் ஆண்டு தொடக்கம் 1919ஆம் ஆண்டு வரையில் போல் இ. பீரிஸ் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த அகழ்வாய்வின்போது இவ்வகை நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.[10] 'புராணஸ்' என்ற பதத்தின் பொருள் 'பழையது' என்பதாகும். இதனையே மேலும் வடமொழியில் 'கார்ஷபண' எனவும், பாளி மொழியில் 'கஹபாணு' எனவும், ஆதிச்சிங்கள மொழியில் 'கஹவணு' எனவும் அழைப்பர். 'புராணஸ்' என்ற இந்த நாணயங்களின் பரிவர்த்தனை வியாபாரத் தொடர்பின் நிமித்தமாகவே இந்தியாவின் பல பகுதிகளுக்கு மட்டுமன்றி, ஈழத்திற்கும் எடுத்துவரப்பட்டதென ஆய்வாளர் கருதுகின்றனர்.[12]

கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய தொல்பொருள் தலங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற, காலத்தால் முந்திய இந்த 'புராணஸ்' நாணயங்களின் அமைப்பு, தன்மை என்பன பற்றி மேலோட்டமாக நோக்குவதும் அவசியமாகின்றது. 'புராணஸ்' நாணயங்கள் பெருமளவிற்கு வெள்ளி உலோகத்தினாலேயே செய்யப்பட்டவையாக உள்ளன. எனினும் பொன், செம்பு ஆகிய உலோகங்களையும் பயன்படுத்தியுள்ளனர். சில நாணயங்கள் இரு உலோகங்கள் கலந்து செய்யப்பட்டனவாகவும் உள்ளன. கந்தரோடையில் கிடைத்த இவ்வகை நாணயங்கள் வெள்ளியினாலும், வெள்ளிமுலாம் பூசப்பட்டுச் செய்யப்பட்டவையாகவும் உள்ளன. 'புராணஸ்' நாணயங்களின் அமைப்பினைப் பொறுத்தமட்டில் பெருமளவிற்கு அவை நீள்சதுரமாக இருப்பதைக் காணமுடிகின்றது. குறிப்பிட்ட உலோகத் தகடுகளை வெட்டி, நீள்சதுரமாகவோ அல்லது சதுரமாகவோ அடித்து, அவசியமாயின் மூலையோரங்களும் வெட்டப்பட்டு அமைக்கப்பட்டதனைக் கந்தரோடை 'புராணஸ்' நாணயங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வகை நாணயங்களின் முன் - பின் புறங்களில் அல்லது ஏதாவது ஒரு பக்கத்தில் இலச்சினைகள் குத்தப்பட்டிருப்பதைக் காணலாம். சிலவற்றில் இலச்சினைகளற்ற தன்மையைக் கூடக் காணலாம்.[13]

'புராணஸ்' நாணயங்களையொத்த வகையில், அதனைத் தொடர்ந்து வந்ததாகவே 'வார்ப்புக்காசுகள்' காணப்படுகின்றன என ஆய்வாளர்

குறிப்பிடுகின்றனர். இவ்வினத்தைச் சேர்ந்த பல நாணயங்களை ஆய்வாளர் கந்தரோடையில் கண்டுபிடித்துள்ளனர். முதலாம் வகை நாணயங்களுக்கும், இவற்றுக்குமிடையே காணப்படும் வேறுபாடு குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது வகையில் முதலிலே தகடுகளைச் செய்து அதன் பின்னரே உருவங்களைக் குத்திப் பொறிப்பதாக இருக்க, இவ்விரண்டாவது வகையில் குறிப்பிட்ட ஒரே நேரத்தில் உருவத்தினையும் உலோகத்தினையும் 'வார்ப்பு' மூலம் அமைத்துக் கொண்டனர். இவ்வகை நாணயங்கள் பற்றிய ஒரு பூரண விளக்கத்தினை இவ்வாய்வில் ஈடுபட்டுள்ள திரு. சி. சிவசாமி தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்.[14]

''முதலில் ஒரு புறத்திலும் பின் இரு புறங்களிலும் இலச்சினைகள் இடம் பெற்றன. பின்புறத்தில் அச்சுக்குத்திய இலச்சினைகளுமுள்ளன. இக் காசுகளிற் சில நீள்சதுர வடிவின; சில வட்டமானவை; வேறுசில நீண்டுருண்டையானவை;...... சிலவற்றிலே வேதிகையுடன் மரமும், சுவஸ்திகாவும், பிறசின்னங்களும் முன்புறத்திலே காணப்படுகின்றன. பின்புறத்திலே வேதிகையும், நந்திபாதமும் பிற சின்னங்களுமுள்ளன. சிலவற்றிலே புத்தசக்கரம், சைத்தியம் முதலியன இடம்பெற்றுள்ளன. சிலவற்றின் முன்பக்கத்திலே வேதிகையிலுள்ள கொடித்தம்பத்தை நோக்கி யானையும், அதற்குமேலே வட்டமான கோயில் அல்லது தூணுள்ள வீடு அல்லது கொட்டில் போன்றவையும் வேறு சில சின்னங்களும் உள்ளன. இவை பழைய பாண்டிய காசுகளாக இருக்கலாமென போல் இ. பீரிஸ் கருதினார். சிலவற்றிலே எருது காணப்படுகின்றது. பிடரி மயிரில்லாச் சிங்கம் பொறிக்கப்பட்டுள்ள நாணயம் மகாசேனன் காலத்தவை எனக் கொட்றிங்ரன் குறிப்பிட்டுள்ளார். கந்தரோடையிலே போல் இ. பீரிஸ் சேகரித்த காசுகளிலே இந்தியாவிலுள்ள மால்வாக் காசுகளில் காணப்படும் 'உஜ்ஜயின் இலச்சினை' (தர உள்ள இருவட்டங்கள்) யும், 'சதகனிச்' என்ற வாசகமும் உள்ள காசு ஒன்று இருந்தது. இது சாதவாக காசாக இருக்கலாம்.''

கந்தரோடை, வல்லிபுரம், நல்லூர் ஆகிய தொல்லியல் தலங்களிலே கண்டுபிடிக்கப்பட்ட புராதன நாணயங்களில் இன்னொருவகை 'லக்ஷ்மி' நாணயங்களாகும். இலங்கையில் பல்வேறு பகுதிகளில் இவ்வகை நாணயங்கள் கிடைத்துள்ளனவெனினும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைத்தவை மிகவும் சிறப்பானவையென தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.[15] கந்தரோடையிற் கண்டுபிடிக்கப்பட்ட 'லக்ஷ்மி' நாணயங்கள் பலவற்றைப்போல் இ. பீரிஸ் என்பவரின் வேண்டுகோளின்படி பிரித்தானிய இரசாயனவியல் ஆய்வாளர் டபிள்யூ. என். றேய் என்பவர் பரிசோதித்தார். அதன்படி அவ்வகை நாணயங்களில் நான்கு பங்கு ஈயமும், ஒரு பங்கு செம்பும் மிகச் சிறிய அளவில் சிலிக்கா, இரும்பு, நிக்கல் ஆகிய உலோகங்களும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.[16]

'லக்ஷ்மி' நாணயங்களுடைய தன்மையை நோக்குதல் அவசியமான தொன்றாகும். 'புராணஸ்' நாணயங்களைப்போன்று இவையும் நீள்சதுர வடிவினவாகும். ''இவற்றின் முற்பக்கத்திலே தாமரையாசனத்திலே நிற்கும் நிலையிலே லக்ஷ்மி விளங்குகிறார். அவரின் இரு கரங்களிலும் கமலங்கள்

நிகழ்கின்றன. இருமருங்கிலும் யானைகள் நீர்சொரிகின்றன. சிலவற்றிலே பின்புறமாக ஒளிவட்டம் காணப்படுகின்றது. இவ்வாறு கஜலக்ஷ்மி அழ காக மிளிர்கிறார். பின்புறத்திலே வேதிகையிலுள்ள ஸ்தம்பத்தின்மீது சுவஸ்திகா முழுநீளத்திற்கும் காணப்படுகின்றது.[17] சில நாணய ஆய்விய லாளர் இவ்வகை நாணயங்களை நன்கு பரிசோதித்த பின் இந்நாணயங்க ளிலே கந்தன், மயில், சேவல், வேல் முதலிய கந்தனின் சின்னங்கள் பொறிக் கப்பட்டுள்ளன என்பதனை எடுத்துக்காட்டியுள்ளனர்.[18]

கந்தரோடையில் இருந்து கிடைத்த மற்றொரு வகை நாணயம் 'சிங் கக்காசு' என்பதாகும். இதுவரையில் குடாநாட்டின் வேறு எப்பகுதியினின்றும் இவ்வகைக் காசு வெளிக் கொணரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருந்தபோதும் இவ்வகை நாணயம் பற்றிய காலவரன் முறை பற்றி ஈழத்து நாணயவியலாளரிடையே பெருமளவிற்கு கருத்து முரண்பாடுகள் நிலவுவதைக் காணலாம். கந்தரோடையில் 1917ஆம் ஆண்டுக்கும் 1919ஆம் ஆண்டுக்குமிடையில் போல். இ. பீரிஸ் என்பவராலும், 1966இல் இலங்கை தொல்லியல் இலாகாவினாலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய் வின்போது பெருமளவிலான நாணயங்கள் கிடைத்தபோதும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இவ்வகைச் 'சிங்கக்காசு' பெற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வகை நாணயங்களின் முற்பக்கத்தில் சிங்கம் பொறிக்கப்பட்டுள்ளது. பிற்பக்கத்தில் மூன்று தனி வட்டங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பிடரி மயிருள்ள சிங்கம் பொறித்த இவ்வகை நாணயங்கள் கி. பி. 3ஆம் நூற் றுண்டைச் சேர்ந்த நாணய வகையாக இருக்கலாம் என போல் இ. பீரிஸ் கருதுகின்றார்.[19] மேலும் இதேபோன்ற நாணயங்கள் அனுராதபுரத்திலும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டமை காரணமாகவும் இவ்வகை நாணயங்களினுடைய தோற்றம் இலங்கைக்கே உரியது என சில ஆய்வா ளர் குறிப்பிட்டுள்ளனர்.[20] வேறுசிலர் மேலும் ஒருபடி முன்சென்று இச்'சிங்கக்காசுகள்' பல்லவப் பண்பாட்டின் செல்வாக்கினால் தமிழ்நாட்டி லிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டவையாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

......பல்லவச் சின்னங்களிலே சிங்கம் பிரபல்யமான இடம் பெற்றுள் ளதை மறுக்கமுடியாது. பல்லவரும் இத்தகைய காசு வெளியிட்டுள்ளனர். சமீபகாலத்திலே இதுபோன்ற சிங்கம்பொறித்த காசு திருக்கேதீஸ்வரத் திலே கிடைத்தது. அதன் முற்பக்கத்திலே சிங்கமும், பிற்பக்கத்திலே பூரண கும்பமும், அயல் இருமருங்கும் குத்துவிளக்குகளும் காணப்படுகின்றன. இவ்வகை நாணயம் பல்லவர் காசு என டி. பி. ஈ. ஹெற்றியாராய்ச்சி என்ற அறிஞர் ஆய்ந்துள்ளார்............[21]

பொதுவாகக் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய தொல்பொருட் தலங் களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 'புராணுஸ்', லக்ஷ்மி நாணயங்கள் என்பனவும் கந்தரோடையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சிங்கக்காசுக ளும் கி. முற்பட்ட 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி. பிற்பட்ட 2ஆம் நூற் றுண்டு வரை புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன என வரலாற்று ஆசி ரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வகை நாணயங்களில் காணப்படும் பல் வகைச் சின்னங்கள் பல மத தொடர்புகளை எடுத்துக் காட்டுகின்றதெனலாம்.

இவற்றுள் 'சுவஸ்திக' சின்னம் எல்லா மதங்களுக்கும் பொதுமைப்பட்ட ஒரு சின்னமாக விளங்குவதைக் காணலாம். ஸ்தூபி, வேதிகை, அரசமரம் என்பவை பௌத்த சமயத்துடன் நெருங்கிய தொடர்புடையவையாக விளங்குகின்றன. அரசமரம் ஏனைய இந்திய சமயங்களிலும் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. எருது, லக்ஷ்மி, கந்தரோடையுடன் தொடர்பு படுத்தப்படும் 'முருக சின்னங்கள்' என்பவை இந்து மதத்துடன் நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன.

## கி. பிற்பட்ட இரண்டாம் நூற்றுண்டுக்கும் ஐந்தாம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய யாழ்ப்பாண நாணயங்கள்:-

வரலாற்று ரீதியாக இக்காலகட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டினைப் பொறுத்து வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்ட ஒன்றுக விளங்கியது. தென்னிந்தியாவுடன் மாத்திரமன்றி ஐரோப்பிய வர்த்தகர்களுடனும் கூடியளவுக்கு யாழ்ப்பாணம் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டமையைக் காணலாம். இதனுல் கிரேக்க, ரோம நாணயங்களின் செல்வாக்கு இக்காலகட்டத்தில் இங்கு புழக்கத்தில் இருந்ததை கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அவ்வகை நாணயங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ரோமர்களின் வர்த்தகத் தொடர்பு தென்னிந்தியாவுடன் கிறிஸ்துவுக்கு முற்பட்ட 2ஆம் நூற்றுண்டு தொடக்கம் இருந்து வந்தபோதும் இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு பொறுத்து அதன் செல்வாக்கு கி. பி. 2ஆம் நூற்றுண்டு தொடக்கம் கி. பி. 5ஆம் நூற்றுண்டு வரை கூடுதலாக ஏற்பட்டிருந்தது எனக் கொள்ளலாம்.

கந்தரோடையிலிருந்தும் வல்லிபுரத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட ரோம நாணயங்கள் பெருமளவுக்கு பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களினுல் செய்யப்பட்டவையாக உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1907இற்குப் பின்பே ரோமக் காசுகள் கிடைக்க ஆரம்பித்தன. இவ்வகை நாணயங்கள் பற்றி ஆய்வாளர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர். ''.......... இந்நாணயத்தின் முற்பக்கத்திலே பொதுவாக இறந்த அல்லது சமகால ரோமப் பேரரசின் கிரீடம் தரித்த தலையும் அவருடைய பெயரும் காணப்படும். பின்பக்கத்தில் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட போர் வீரர்கள் அல்லது சிலுவை முதலிய சின்னங்கள் காணப்படுகின்றன. கந்தரோடையிலே திரு. போல் இ. பீரிஸ் சேகரித்தவற்றுட் பல கி.பி. 4ஆம் 5ஆம் நூற்றுண்டுகளைச் சேர்ந்தவையாம். இவற்றிற்கு முற்பட்ட காலச் சில நாணயங்களும் கிடைத்ததாகத் தெரிகின்றது. ......இக்காசுகள் செம்பினுலானவை. விளிம்பிலே சுற்றிவரப் புள்ளிகள் கொண்டவை. ரோமக் காசுகள் கி.பி. 6ஆம் நூற்றுண்டுவரை புழக்கத்தில் இருந்தன. ரோமக் காசுகளைப் பின்பற்றியும் இலங்கையில் நாணயங்கள் வெளிவந்தன. அரசரின் வடிவம் தாங்கிய காசுகள் ரோமக் காசுகளைப் பின்பற்றியே வெளிவந்திருக்கலாம்.''[22] (ஏறத்தாழ 50க்கு மேற்பட்ட ரோம நாணயங்களை ஆசிரியர் திரு. திருவள்ளுவர் (Nallur Hoard) தம்முடைய நாணயச் சேகரிப்புக்களுடன் கொண்டுள்ளார். (இந்த ரோம நாணயங்களுட் பெரும்பாலானவை கற்பிட்டியிலிருந்து சேகரிக்கப்பட்டபோதும் தற்போது அவை பேணப்படுகின்ற இடம் காரணமாக அவற்றை யாழ்ப்பாணக் குடாநாட்

டின் நாணயங்களுடனேயே வைத்து விரிவான முறையில் ஓர்ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.)

## கி.பி. 6ஆம் நூற்றுண்டுக்கும் கி.பி. 10 ஆம் நூற்றுண்டுக்குமிடையிலான 'யாழ்ப்பாண நாணயங்கள்.

வரலாற்று ரீதியில் யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட இலங்கையானது கி. பி. 6ஆம் நூற்றுண்டு தொடக்கம் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற பேரரசுகளுடன் தொடர்பு கொண்டமை காரணமாக நாணயவியல் வரலாறு பொறுத்தும் அவற்றின் செல்வாக்கை நாம் இங்கே காணக்கூடியதாகவுள்ளது. அதுமாத்திரமல்லாது இந்நூற்றுண்டின் முற்பகுதியில் முழு இலங்கையையும் உள்ளடக்கியதாக தனியோர் அரசு, அரசன் என்ற நிறுவனங்கள் நிலைபெற்றுள்ளதைத் தொடர்ந்து, அதன் செல்வாக்கின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாடும் தவிர்க்க முடியாதபடி உட்பட்டதனை எமக்கு வரலாற்று மூலாதாரங்கள் காட்டிநிற்கின்றன.[23] அத்தகைய ஒரு தன்மையை இங்கே கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும் உணர்த்தி நிற்கின்றன எனலாம்.

இக்காலப் பகுதிக்குரிய நாணயங்களில் அதிகமானவை குடாநாட்டின் சில பகுதிகளிலிருந்தே பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனுல் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய முக்கியமான தொல்பொருட் களஞ்சியங்களில் இருந்து ஒரு சில குறிப்பிட்ட அளவிலான இக்காலத்துக்குரிய நாணயங்களே கிடைத்துள்ளன. 'இக்காலப்பகுதிக்குரிய நாணயங்களாக இடைக்காலப் பாண்டியர் நாணயங்கள், ''கஹவணு'' என அழைக்கப்படும் பிந்திய அனுராதபுர நாணயங்கள், பல்லவர் நாணயங்கள் என்பன இப்பிரிவுக்குள் அடங்குகின்றன.

'கஹவணு' எனக் குறிப்பிடப்படும் பிந்திய அனுராதபுர கால மன்னர் நாணயங்கள் யாழ்ப்பாணக் குடாநாடு பொறுத்து இதுவரைக்கும் கந்தரோடையிலிருந்து மட்டுமே பெற்றுக் கொள்ளப்பட்டன. இலங்கையில் ரோம நாணயங்களின் புழக்கம் ஏற்பட்டபின் இலங்கை மன்னரும் தமது நாணயங்களில் முற்பக்கத்தில் ரோம நாணயங்களில் உள்ளது போன்று தமது உருவங்களையும் பொறிக்கத் தொடங்கினர். இத்தன்மையை பிந்திய அனுராதபுரகால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் இருந்து குறிப்பாக 'கஹவணு' என்றழைக்கப்பட்ட அவர்களுடைய நாணயங்களில் இருந்து கண்டுகொள்ள முடிகின்றது. 'கஹவணு' என்றழைக்கப்படும் இந்த நாணயம் பிறநாட்டு வர்த்தகத்திற்கென்றே உருவாக்கப்பட்டது என்பது அறிஞர்களுடைய பொதுவான கருத்தாகும்...... இவை சிறியவை. மேற்குறிப்பிட்ட காசிலே 'ஸ்ரீ லங்கா' என்ற வாசகம் நாகரிலிபியில் உள்ளது. சிலவற்றிலே லக்ஷ்மி நிற்கும் நிலையிலே தாமரையாசனத்திலே காணப்படுகிருர். வேறு சிலவற்றிலே அர்த்த சந்திரன், தாமரை முதலியனவும் 'நந்தக்' அல்லது 'உரக' அல்லது 'தரக' அல்லது 'இரகு' / 'அரசு' என்ற வாசகம் நாகரி எழுத்தில் காணப்படுகிறது. இந்த நாணயங்களிலே வடஇந்திய நாகரிலிபி பயன்படுத்தப் பட்டதிலிருந்து இவை வெளிநாட்டு வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்பட்டன என்பது தெளிவாகின்றது. வடமொழி இந்

தியப் பொதுமொழியாக மட்டுமன்றி இலங்கை, பர்மா, தென்கிழக்காசியா, மத்தியாசியா ஆகிய இடங்களில் பொதுமொழியாகவும் நிலவியது''.[24]

இலங்கையில் மனிதவடிவத்தை அதாவது அரசரின் வடிவத்தைத் தாங்கிய காசுகள் கி. பிற்பட்ட 8ஆம் நூற்றாண்டிலிருந்தே வெளிவந்தன எனலாம். இடைக்காலப் பாண்டியர் நாணயங்களில் இருந்து இதனை நாம் உணர்ந்து கொள்ளலாம். பொதுவாக இடைக்காலப் பாண்டியர் நாணயங்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கும் 10ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்துக்குரியனவாகும். கந்தரோடையிலே கிடைத்த மீன் இலச்சினை பொறித்த நாணயங்கள் பண்டியருக்குரியனவாகவே கொள்ளப்படுகின்றன. ஆரம்பத்திலே பாண்டியர் நாணயங்களிலே யானை உருவமே பொறிக்கப்பட்டு மீன் உருவமாக மாற்றப்பட்டது என நாணயவியலாளர் கருதுகின்றனர்.

## மத்தியகால நாணயங்கள் (கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்கும் 15ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை.)

பரந்த அடிப்படையில் நோக்கும்போது இலங்கை முழுவதிலும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மிகப் பெருந்தொகையாகக் கிடைத்த நாணயங்கள் இம்மத்திய காலத்துக்குரியனவாகவே உள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சிதறலாக, பெருமளவிலான தலங்களிலிருந்து இந்தக் காலத்துக்குரிய நாணயங்கள் கிடைக்கப்பெற்றும், கிடைத்தும் கொண்டுமிருக்கின்றன. இலங்கையின் பொருளாதார வரலாற்றில் இம் மத்திய காலப்பகுதியானது (கி. பி. 10 - கி. பி. 15) செழிப்பு மிக்க ஒன்றாக விளங்கியதென்பதில் ஐயமில்லை. இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத் துறைகள் பொறுத்தும், விவசாய அபிவிருத்திகள் பொறுத்தும் மிகவும் ஒரு சுறுசுறுப்பான காலகட்டமாக இம் மத்தியகாலம் அமைந்தது. எனவே அத்தகைய ஒரு நிலையில் நாணயப்பரிவர்த்தனைகளும் மிகவும் நெருக்கமான முறையில் நடைபெற்றிருக்குமென்பது தெளிவு. இதன் காரணமாக மிகப் பல நாணயங்கள் இக்காலகட்டத்தில் பரிவர்த்தனையின் பொருட்டு வெளியிடப்பட்டன. இச்சுறுசுறுப்பான மத்திய காலகட்டத்துடன் யாழ்ப்பாணக் குடாநாடும் தொடர்புற்றிருந்தது என்பதற்கு இங்கு கண்டெடுக்கப்பட்ட பெருந்தொகையான அக்காலப்பகுதிக்குரிய நாணயங்களே சான்றாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே கிடைத்த மத்தியகால நாணயங்களிலே குறிப்பிடத் தக்கனவாகச் சோழமன்னர்களுடைய நாணயங்கள் முதலாம் பராக்கிரமபாகு, முதலாம் விஜயபாகு, நிஸங்கமல்லன், சோடகங்கன், லீலாவதி, சாஹஸமல்ல, தர்மாசோக நாணயங்கள் என்பன காணப்படுகின்றன. சோழப் பெருமன்னர்களின் ஆதிக்கப்படர்ச்சியின் கீழ் இலங்கையும் ஒரு மாகாணமாக மாறியதைத் தொடர்ந்து, (கி.பி. 1017) முதலாம் ராஜராஜனால் வெளியிடப்பட்ட 'ஸ்ரீராஜராஜ' எனப் பெயர் பொறித்த நாணயங்கள் வெளிவந்ததைத் தொடர்ந்தே இலங்கையில் முதன்முதலாக மன்னர்களுடைய பெயர் பொறித்த நாணயங்கள் வெளிவரத்தொடங்கின என்ற கருத்து மீளாய்வுக்குரியதொன்று எனலாம்.

மத்தியகால நாணயங்கள் பல்வேறு அளவுகளிலும் வேறுபட்ட உலோகங்களிலும் வெளிவந்ததை யாழ்ப்பாணக் குடாநாட்டின்கண் சேகரிக்கப்பட்ட அவ்வகை நாணயங்களில் இருந்து அறியலாம். ஒரளவுக்கு பொன், வெள்ளி என்பவற்றுலும், பெருமளவுக்குச் செம்பினுலுமே இங்கு கிடைத்த மத்தியகால நாணயங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் வெள்ளிமூலாம் பூசிய செம்பு நாணயங்களும் குறிப்பிடத்தக்கவையாகும். மத்தியகால நாணயங்கள் பற்றிய சில தன்மைகளை பின்வருமாறு சுருக்கிக்கூறலாம்...'' இவற்றின் முன்புறத்திலே அனுராதபுரகாலப் பிற்பகுதி நாணயங்களைப் போன்று நிற்கும் நிலையிலும், பின்புறத்திலே இருக்கும் நிலையிலும் மன்னன் காணப்படுகின்முன். பின்புறத்தில் மன்னனின் பெயர் நாகரி எழுத்திலே பொறிக்கப்பட்டுள்ளது....... நாணயத்தினைச் சுற்றிவர, விளிம்பிலே புள்ளிகள் உள்ளன.''[25] தொழில் நுட்பம் பெருமளவுக்கு மத்திய காலத்தில் சிறப்புற்றிருந்தமை காரணமாக நாணயங்களும் ஒழுங்காக வட்டவடிவில் அழுத்தம் திருத்தமாக வெளியிடப்பட்டன.

தம்பதெனியா, கோட்டை மன்னர்களுடைய நாணயங்கள் யாவும் இப்பிரிவுக்குள்ளேயே அடங்குகின்றன. இவர்களுடைய நாணயங்கள் பல யாழ்ப்பாணக் குடாநாட்டிற் காணப்படும் தொல்பொருள் தலங்களிலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கின்றன. தம்பதெனியாக்கால மன்னர்களான இரண்டாம் பராக்கிரமபாகு, நான்காம் விஜயபாகு, முதலாம் புவனேகபாகு ஆகியோருடைய நாணயங்கள் கந்தரோடை, வல்லிபுரம், அச்சுவேலி, தெல்லிப்பளை, புங்குடுதீவு முதலிய இடங்களில் இருந்து கிடைத்துள்ளன. கோட்டை மன்னர்களுள் ஆரும் பராக்கிரமபாகுவின் நாணயங்கள் பல கந்தரோடை, வல்லிபுரம், நல்லூர், கொக்குவில் ஆகிய பல இடங்களில் இருந்து கிடைத்தன.

**சேது நாணயங்கள்** (யாழ்ப்பாணத்துத் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள்.)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தொல்பொருள் தலங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற நாணயங்களில் விசேடமானதாகவும் ஆய்வுக்குகந்ததாகவும் காணப்படுவது 'சேது' (சேது) நாணயங்களாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கிடைத்த நாணயங்கள் பற்றியாய்வு செய்த ஆய்வாளர் சேது நாணயங்கள் பற்றிய விடயத்தில் கூடுதலான அக்கறையுடன் ஆய்வுசெய்து, அவற்றின் பல்வேறு வகைகளைத் தரம் பிரித்துக் காட்டியுள்ளனர். ஐராவதம் மகாதேவன், சுவாமி ஞானப்பிரகாசர், செ. இராசநாயகம், எச். டபிள்யூ. டி. கொட்றிங்ரன், கலாநிதி. கு. பத்மநாதன் ஆகியோரே இத்துறையில் குறிப்பிடத் தக்கோராவர்.

'சேது' நாணயங்கள் முதன்முதலாக யாழ்ப்பாணத்தையாண்ட ஆரியச் சக்கரவர்த்திகளினுலேயே வெளியிடப்பட்டது என்ற கருத்தினை எடுத்துக்காட்டியவர் முதலியார் செ. இராசநாயகம் அவர்களாவர்.[26] இவர்களுடைய அக்கருத்தினையே சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்கள் உறுதிப்படுத்தினர்.[27] ஆனல் விஞ்ஞானரீதியிலான ஆய்வின் அடிப்படையில் சேது நாணயங்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களாலேயே வெளியிடப் பெற்றன என்பதனை முதன்முதலாக எடுத்துக்காட்டியவர் ஐராவதம் மகாதேவன்

அவர்களாவர்.[28] மூன்று முக்கியமான, (ஆரியச்சக்கரவர்த்திகளினால் வெளியிடப்பெற்ற) நாணயங்களை எடுத்து விளக்கி, அவை யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளினாலேயே வெளியிடப்பட்டவை என எடுத்துக்காட்டியிருப்பது, தொல்லியல் விஞ்ஞானரீதியாக அவர் கொண்டிருக்கும் புலமையைக் காட்டுகின்றது.[29]

நீண்டகாலமாக, சேது நாணயங்கள் பாண்டியராலும் சோழமன்னர்களாலுமே வெளியிடப்பெற்றன என்ற கருத்து நிலவி வந்தது.[30] இக்கருத்துக்கெதிராக, தனது விஞ்ஞானரீதியில் அமைந்த புலமையில் தன் விளக்க முறையை உபயோகித்து 'சேது' நாணயங்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்களான ஆரியச்சக்கரவர்த்திகளினாலேயே வெளியிடப்பட்டவை என்பதற்கு உறுதியான - தெளிவான ஆதாரங்களை ஐராவதம் மகாதேவன் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் அவர் ஆரியச்சக்கரவர்த்திகளினால் வெளியிடப்பட்ட நாணயங்களை இரண்டு பெரும் பிரிவுகளுக்குட்படுத்தி ஆய்வு செய்துள்ளார்.

அவையாவன:–

(1) முற்பட்ட கால சேது நாணயங்கள். (கி. பி. 1250க்கும் 1350க்குமிடைப்பட்டவை.)

(2) பிற்பட்ட கால சேது நாணயங்கள். (கி. பி. 1350க்கும் 1600க்குமிடைப்பட்டவை.)

இவ்விருகாலப் பிரிவுகளுக்கிடையில் பல்வேறு வகையான சேது நாணயங்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களால் வெளியிடப்பட்டன என்பது அவரது கருத்தாகும். ஆனால் சேது நாணயங்கள் பற்றிய விரிவான ஓர் ஆய்வினை நடாத்திய கலாநிதி S. பத்மநாதன் கிடைத்த நாணயங்களை அறுபெரும் பிரதான வகைகளுக்குட்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளும் வெளியிலும் இவ்வகை நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நல்லூர், திருநெல்வேலி, கோப்பாய், சண்டிலிப்பாய், புத்தூர், நாகர்கோயில், நாரந்தனை, மாந்தை, மாங்குளம், தென்னிந்தியாவின் சில பகுதிகள் ஆகிய இடங்களிலிருந்து சேது நாணயங்கள் கிடைத்துள்ளன. இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்து கிடைத்த சேது நாணயங்களுள் திருகோணமலைத் துறைமுகப்பகுதியில் இருந்து கிடைத்தவை குறிப்பிடத்தக்கதாகும்.

சேது நாணயங்களைப் பற்றி ஆய்வு செய்த கொட்றிங்ரன் அந்நாணயங்களில் உள்ள லிபியினை தவறாக வாசித்துள்ளமையை ஐராவதம் மகாதேவன் எடுத்துக்காட்டியுள்ளார். கொட்றிங்ரன் கலிங்கர் கால தேவநாகரிலிபியின் வேறுபாட்டை உணராமல் வாசித்தமையினாலேயே சேது நாணயம் ஆரியச்சக்கரவர்த்திகளினால் வெளியிடப்பெற்றவை என்பதைக் கண்டு கொள்ள முடியாமற் போய்விட்டது என ஐராவதம் மகாதேவன் மேலும் குறிப்பிட்டுள்ளார். அவர் கலிங்கர் கால 'ரா' என்ற லிபிக்கும் சாதாரண 'ப' என்பதற்குமிடையே நெருங்கிய ஒற்றுமையிருப்பதனை எடுத்துக்காட்டி சரியான உச்சரிப்பினை விளக்கியுள்ளார்.

| | |
|---|---|
| சரியான வாசிப்பு: | Sri ra ja se ka ra — |
| கொட்றிங்ரனது வாசிப்பு: | Sri ba(va) la... ka(m) va(ca) |

சேது நாணயங்களில் ஒருவகையான செகராச சேகரவகையான நாணயங்கள் பற்றிய விளக்கத்தினைக் கொடுக்கும்போது சோழர் நாணயங்களில் எவ்வாறு ''இராஜராஜ'' அல்லது ''ராஜராஜ'' எனப் பெயக் பொறிக்கப்பட்டுள்ளதோ அதனையொத்தவகையில் யாழ்ப்பாணத்தரசர்களும் ''செகராசெகர'' என நாணயங்களில் பெயரைப் பொறித்துள்ளனர் என விளக்கியுள்ளார்.

சேது நாணயங்களிலுள்ள குறியீடுகளையும், சின்னங்களையும் வைத்துக் கொண்டு சித்தாந்த ரீதியில் முதலியார் செ. இராசநாயகம் விளக்கம் கொடுத்துள்ளார். சேது, சேதுகாவலர், இராமேஸ்வரம் ஆகியவற்றோடு கூடிய இடவிளக்கத் தொடர்புகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார். ''..... சேது நாணயத்தின் பின்பக்கத்திலுள்ள சின்னங்கள் பரமேஸ்வரனையும் (அவர் படைத்த பிரபஞ்சத்தையும்) யாழ்ப்பாண இராச்சியத்தில் அடங்கியுள்ள இராமேஸ்வரத்திலுள்ள ஆலயத்தினையும் குறிப்பன......'' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி எஸ். பத்மநாதன் தனது கலாநிதிப் பட்டத்தின் பொருட்டு மேற்கொண்ட 'யாழ்ப்பாண அரசு' என்ற ஆய்வில் சேது நாணயங்களைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வினை ஓர் அத்தியாயமாக அடக்கியுள்ளார். இதுவரை செய்து முடிக்கப்பெற்ற சேது நாணயங்கள் பற்றிய ஆய்வில் இதுவே விரிவானதும் குறிப்பிடத்தக்கதுமாகும். ஏறத்தாழ எண்பதுக்கு மேற்பட்ட சேது நாணயங்களையுள்ளடக்கியதாக இவருடைய அவ்வாய்வு அமைந்துள்ளது.[31] ஆசிரியர் ஆறு பிரதான பிரிவுகளின் அடிப்படையில் அந்நாணயங்களில் காணப்படுகின்ற அம்சங்களை ஒரு காலவரன்முறை அடிப்படையில் முதன்முதலாக எடுத்து விளக்கியுள்ளமை வருங்கால ஆய்வாளருக்கு ஒரு பெரும் வாய்ப்பையே கொடுத்துள்ளது எனலாம். ஆனால் முதலியார் செ. இராசநாயகம் குறிப்பிட்டது போன்றே பத்மநாதனும் சேது நாணயங்களை இராமேஸ்வரத்துடன் தொடர்புபடுத்தி, அவற்றின் சமய, அரசியல் முக்கியத்துவத்தினை எடுத்து விளக்கியுள்ளார்.

## முடிவுரை:-

இதுவரையில் மிகவும் சுருக்கமாக ''யாழ்ப்பாணக் குடாநாடு'' என்ற பிரதேச எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பில் கிடைத்த 15 ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்ட காலத்திய நாணயங்கள் பற்றிய ஒரு மேலோட்டமான தொகுப்பாய்வினைக் கொடுக்க முடிந்தது. ஆனல் இப்பிரதேச நாணயவியல் பற்றிய ஆய்வினை மிகவும் விரிவான முறையில் இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் இணைத்து நோக்குதல் அவசியமானதொன்றுகும். இந் நாணயவியலுடன் தொடர்பானதாகவுள்ள 'விக்கிரஹவியல்' பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவேண்டிய ஓர் அவசியத்தினை இனித் தொடரப்போகும் ஆய்வாளர் உணரவேண்டும். நாணயங்கள் பற்றிய ஆய்வுகளினை விரிவானமுறையில், விஞ்ஞானரீதியாக மேற்கொள்வதன் மூலம் மறைந்து கொண்டிருக்கின்ற எமது பல பாரம்பரிய கலைமரபுகளை மீண்டும்

தோற்றுவிக்கமுடியும். மேலும் இந்நாணயங்கள் பற்றிய ஆய்வுகள் மூலம் சமய – தத்துவ சித்தாந்தக் கொள்கையின் வளர்ச்சி, சமுதாயத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள், எழுத்துவளர்ச்சி, ஆதிக்கப்படர்ச்சி, வெளிநாட்டுத்தொடர்புகள் முதலிய இன்னோரன்ன விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

---

## அடிக்குறிப்புகள்:-

1. சிவசாமி, வி. யாழ்ப்பாணக்காசுகள், யாழ்ப்பாணம், 1974.
2. Encyclopaedia Britanica (Micropaedia) Vol II, p. 1046.
3. Sircar, D. C. Studies in Indian coins, Delhi, 1969. pp. 1 - 2.
4. சேயோன், கா.நா.வே. 'ஈழத்துப் புராதன நாணயங்கள்' யாழ்ப்பாணத்துக் தொல்பொருளியற் கழகத்தில் 24. 11. 1975இல் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவு.
5. சிவசாமி. வி. யாழ்ப்பாணக்காசுகள். யாழ்ப்பாணம், 1974. ப. 1.
6. சேயோன், கா. நா. வே. மேற்படி.
7. சிவசாமி, வி. யாழ்ப்பாணக்காசுகள். யாழ்ப்பாணம், 1974. ப. 1.
8. மேற்படி.
9. சேயோன், கா. நா. வே. மேற்படி.
10. Pieris, P. E. 'Nagadipa II (Coins)' JRAS (CB), 1919. p. 73.
11. சிவசாமி, வி. யாழ்ப்பாணக்காசுகள், யாழ்ப்பாணம், 1974. ப. 2.
12. சிவசாமி, வி. தொல்பொருளியல் ஓர் அறிமுகம். ஈழநாடு மறுபிரசுரம் 1972. ப. 4.
13. Codrington, H.W. Ceylon coins and currency. 1924. P.63.
14. சிவசாமி, வி. யாழ்ப்பாணக்காசுகள். யாழ்ப்பாணம், 1974. ப. 3.
15. Codrington, H.W. Ceylon coins and currency. 1924. pp. 26 - 31.
16. சேயோன், கா. நா. வே. மேற்படி.
17. சிவசாமி, வி. யாழ்ப்பாணக்காசுகள். யாழ்ப்பாணம். 1974. ப. 3.

18. சேயோன், கா. நா. வே. மேற்படி.

19. Pieris, P. E. 'Nagadipa II (Coins)' JRAS (CB) 1919, p. 56.

20. Ibid.

21. சிவசாமி, வி., மேற்படி ப. 4.

22. மேற்படி.

23. பரணவிதான, எஸ்., ''வல்லிபுரம் பொற்சாசனம்''

24. சிவசாமி, வி., மேற்படி. ப. 6.

25. மேற்படி.

26. Rasanayagam, C. Ancient Jaffna. pp 300 - 303.

27. சிவசாமி, வி., ''யாழ்ப்பாணத்தில் 1972ஆம் ஆண்டு கிடைத்த சில நாணயங்கள்'' பூர்வகால, யாழ்ப்பாணத் தொல்பொருளியற்கழக வெளியீடு, 1973. ப. 25.

28. Iravatham Mahadevan. "Some rare coins of Jaffna", Damilika, Journal of the depart of Archaeology, Government of Tamil Nadu, Vol. 1 pp. 111 - 119.

29. ஐராவதம் மகாதேவன் என்பவரே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் தமிழ்ப்பிராமி எழுத்துக்களை எடுத்துக்காட்டி, சில தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்களைச் சங்க இலக்கியப் பாடல்களுடன் ஒப்பிட்டுச் சங்கஇலக்கியங்களுக்குச் சாசனவியல் ரீதியாக ஒரு காலவரையறையை வகுத்துக் கொடுத்தார். அவ்வகையிலும் சேது நாணயங்களில் உள்ள லிபி வடிவை எடுத்துக்காட்டி அவை யாழ்ப்பாணத்து தமிழ் அரசர், ஆரியச்சக்கரவர்த்திகளினாலேயே வெளியிடப்பட்டன என்பதனை நிரூபித்த தன் அடிப்படையிலும் அவர் நாணயவியல், சாசனவியல் ஆய்வாளர் மத்தியில் முக்கியமான ஒருவராகக் காணப்படுகின்றார்.

30. Iravatham Mahadevan., 'Some rare coins of Jaffna', Damilike Vol. 1, p. 111.

31. Pathmanathan, S., 'Coins of medieval Sri Lanka: The coins of the kings of Jaffna' Spolia Zeylanica, Vol. 35, Part I & II, 1980, pp. 409 – 447.

———